# 3 ஒலிபெருக்கிகளைத் திருடியவர் ராம்


Registered as a Newspaper in Ceylon

★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10

இதழ் 262

தபால்பெட்டி எண்: 49

போன்:389

National Tamil Daily

தேசிய தினசரி

பிரசோற்பத்தி வருடம் ஐப்பசி 15 ஷபான் 8 வியாழக்கிழமை (31-10-68


நல்லூர், புதன்

ரோந்து சுற்றி வந்து கொண்டிருந்த பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவரிடம் களவாடப்பட்டதாகக் கருதப்படும் 3 ஒலி பெருக்கிகளும், 10 பூச்சாடிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

நேற்று நள்ளிரவு யாழ்ப்பாண குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் டயஸ், சார்ஜன்ட் கனகரெத்தினம், கான்ஸ்டபிள் இரத்தினம் ஆகியோரால் இதுசம்பந்தமாக கைது செய்யப்பட்ட கொழும்புத்துறையைச்சேர்ந்த பிலிப் ராஜசேகரம் என்பவர் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள 3 தேவாலயங்களில் இந்த 3 ஒலி பெருக்கிகளும் களவாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## வியட்நாமில் குண்டு வீச்சு நிறுத்தப் படலாம்

பாரிஸ், ஒக் 30

வடவியட்நாம் குண்டுவீச்சு நிறுத்தப்படுவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் பேச்சுகள் இதற்கு வழிகோலியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சரித்திரத்தில்

# முதல் தடவையாக ஒரு பெண் போட்டி

## முன்னாள் மேயருக்கும் மற்றொருவருக்கும் போட்டியில்லை

### 21 வட்டாரங்களில் 72 பேர்

யாழ்ப்பாணம் புதன்

கலைக்கப்பட்ட யாழ்ப்பாண மாநகரசபையின் மேயராகப்பதவி வகித்த திரு. அல்பிரட் தங்கராசா துரையப்பாபுதிய யாழ்ப்பாண மாநகர சபைக்குஆறும் வட்டாரத்திலிருந்து போட்டியின்றித்தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். 19-ம் வட்டாரத்தில் ஜனாப் எம்.ஏ. ஸி,எஸ். காதரும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மொத்தம் 23 வட்டாரங்களில் இரண்டு வட்டாரங்களில் தவிர 21 வட்டாரங்களிலும் போட்டியிருக்கிறது. 15 வட்டாரத்தில் மட்டும்எட்டுப்பேர் போட்டியிடுகின்றனர்.

யாழ்ப்பாணம், புதன்

யாழ்மாநகரசபைதேர்தலில் 12 வட்டாரங்களில் தமிழ்க்காங்கிரசும், 7 வட்டாரங்களில் தமிழரசும், இரு வட்டாரங்களில் சமசமாஜக்கட்சியும், இரு வட்டாரங்களில் கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) கட்சியும் தமது அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது.

மொத்தம் 49 பேர் 21 வட்டாரங்களில் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றனர்கள். 6-ம், 19-ம் வட்டாரங்களில் சுயேச்சை அபேட்சகர்களான திருவாளர்கள் அல்பிரட் துரையப்பாவும், எம். ஏ. சி. எஸ். ஏ. காதரும் போட்டியின்றித் தெரியப்பட்டுள்ளார்கள்.

இரண்டாம் வட்டாரத்தில் போட்டியிடும் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் என்ற பெண் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகின்றார்.

தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கு சைக்கிளும், தமிழரசுக்கு வீடும், சமசமாஜக் கட்சிக்கு சாவியும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு நட்சத்திரமும் சின்னமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 15-ம் வட்டாரத்தில் எதிர்க்கட்சி கூட்டணியினர் இருவர் போட்டியிடுகின்றனர்.

15-ம் வட்டாரத்தில் போட்டியிடும் எட்டு அபேட்

[8-ம் பக்கம் பார்க்க]

## “சரியானபாடம் கற்பித்துவிட்டனர்”

### திரு. துரையப்பா கூறுகிறார்



யாழ்ப்பாணம், புதன்

“எனது தலைமையில் மாநகரசபை சரியாக நிர்வகிக்கப்பட்டு வந்த போது, சபையைக் கலைத்ததற்கு இன்று என்னைப் போட்டியின்றித் தெரிவு செய்ததன் மூலம் மக்கள் சரியான ஒரு பாடம் கற்பித்திருக்கிறார்கள்”

இவ்வாறு கலைக்கப்பட்ட மாநகர சபையின் மேயராக இருந்து நேற்று 6-ம் வட்டாரத்துக்கு போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட திரு. அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

திரு. அல்பிரட் துரையப்பா என்னிடம் மேலும் தெரிவித்ததாவது:-

முதலில் என்னைப்போட்டியின்றித் தெரிவு செய்ததற்காக எனது வட்டார மக்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப் பட்டவனாவேன். கடந்த 20 ஆண்டுகளாக பதவியிலிருந்தும், பதவியில்லாமலும் நகர மக்களுக்கு நான் செய்த சேவையை மீண்டும் செய்ய எனக்குச் சந்தர்ப்பம் அளித்த நகர வாக்காளர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டவனாவேன்.

19-ம் வட்டாரத்தில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட திரு. எம். ஏ. ஸி. எஸ். ஏ. காதர் தெரிவித்ததாவது:-

என்னைப் போட்டியின்றித் தெரிவுசெய்ததற்காக எனது வட்டாரத்தில் வசிக்கும் இந்து, கிறிஸ்தவ முஸ்லிம் மக்களுக்கு எனது நன்றிகளை நான் தெரிவிக்கின்றேன். இதே போல சாதிசமய வேறுபாடின்றி நான்சேவைசெய்ய [illegible] வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

[ஈ.நி]

கலைக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபைக்குப் புதிய அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதற்காக இவ்வருட இறுதியில் நடைபெறவிருக்கும் தேர்தலில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்கள் நேற்று முற்பகலில் தமது அபேட்சகப்பத்திரங்களை வடமாகாண தேர்தல் அதிகாரி திரு. எஸ். கந்தசாமி முன்னிலையில் தாக்கல் செய்தனர். யாழ்ப்பாண மாநகரசபைக் கட்டிடத்தில் கமிட்டி அறையில்வைத்து அபேட்சகப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம் வட்டாரத்திலிருந்து 12-ம் வட்டாரம் வரையிலான அபேட்சகப்பத்திரங்கள் முற்பகல் 10 மணியிலிருந்து 11 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆறும் வட்டாரத்திலிருந்து திரு. அ. துரையப்பா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டதாகச் சரியாக முற்பகல் 11-30க்கு தேர்தல் அதிகாரி அறிவித்தார். ஆதரவாளர் அவரு

[8ம் பக்கம் பார்க்க]

## போட்டியிடும் அபேட்சகர்கள்

**1-ம் வட்டாரம்**

நா. சங்கரப்பிள்ளை (காங்கிரஸ்) - சைக்கிள்

ஏ. ஜி. இராஜகுலேபர் - குடை

கே. கந்தையா. - சேவல்

**2-ம் வட்டாரம்**

பி. எம். ஜோன். - தராசு

ஏ. செல்வநாயகம். (காங்கிரஸ்) - சைக்கிள்

எம். எஸ். பேரின்பநாயகம். - குடை

**3ம் வட்டாரம்**

ஜே. எப். இக்னேஷியஸ் ஜோன். - கப்பல்

ஏ. எல். ஏப்ரஹாம். - குடை

**4-ம் வட்டாரம்**

எம். எஸ். பீற்றர்-தராசு

திருமதி அந்தோனியா சுவாமிநாதர்காங்கிரஸ்- சைக்கிள். சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை. - கண்

[8 ம் பக்கம் பார்க்க]

## அரசாங்க ஊழியர் சம்பள விகிதங்கள்

### ஆராய சன்சோனி தலைமையில் கமிஷன்

கொழும்பு புதன்

சம்பளக் கமிஷன் ஒன்றை உடனடியாக நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

அரசாங்க ஊழியர்களின் சம்பள விகிதங்கள் சம்பள முரண்பாடுகள் ஆகியவை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும் சிபார்சு செய்யவும் நியமிக்கப்படும் இக்கமிஷனின் தலைவராக முன்னாள் பிரதம நீதியரசர் திரு. எம். ஸி. சன்சோனியும், திரு. வி. ஸி. டி. ஸில்வா, ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. எம். பி. டி. ஸில்வா ஆகியோர் கமிஷனின் இதர அங்கத்தவர்களாகவும் நியமிக்கப்படுவதாகவும் இவர்களை இதற்கு ஒப்புக்கொள்ளச் செய்வதில் நிதியமைச்சர் முயற்சி செய்து வருவதாகவும் அறியப்படுகிறது.

இதேசமயம் உரக்கூட்டுத்தாபனத் தலைவராக இருக்கும் திரு. மகிந்தா ஸில்வாவையும் இக்கமிஷனில் ஓர் அங்கத்தவராக நியமிக்க வேண்டுமென அரசாங்க ஊழியர் கேட்டுள்ளனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள்வேத வைத்தியசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் ஆயுர்வேத பட்டதாரிகளைப் பதிவுசெய்வதென ஆயுர்வேத வைத்தியசபை தீர்மானித்துள்ளது.

வட இலங்கைச் சுதேச சபையின் அநுகோஷ்டி ஒன்று ஆயுர்வேத வைத்திய சபையைப் பேட்டி கண்டு பட்டதாரிகளைப் பதிவுசெய்யும் விஷயமாகப் பேச்சுவார்த்தை நடத்தியது. இந் அநுகோஷ்டிக்கு முகாந்திரம் க. பி. இராசையா தலைமைவகித்தார். இவ்விஷயமாக அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஓர் உப சபை நிறுவப்பட்டது.

உப சபையால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஆயுர்வேத வைத்தியசபை பரிசீலனைசெய்து இம்முடிவைச் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் சித்த வைத்தியக் கல்லூரி நிறுவப்படும்வரை, இக்கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் சித்தியடையும் பட்டதாரிகளை ஆயுர்வேத வைத்திய சபை நேர்முகப் பரீட்சை வைத்துப் பதிவுசெய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

இன்றுமுதல்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - K.R. விஜயா
நடித்த
**தாழம்பூ**

---

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா
நடித்த
**காவல்காரன்**

---

(மானிப்பாய்
**வெல்லி சினிமா**
தினசரி 6-30, 9-30
சோமா, பின் சோமா 2-30
சிவாஜி- சாவித்திரி
நடித்த
**நவராத்திரி**

---

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
**பெண் என்றால் பெண்**

---

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7&9-45p.m.
Jim Reeves
in
KIMBERLEY JIM
(in sparking color)

---

## குழந்தைகளுக்கு பால்மா இல்லை

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறைப் பகுதியில் கடந்த ஆறு மாதங்களாகக் குழந்தைகளுக்கு இலவச பாலுணவு விநியோகித்துவந்த நான்கு பால் நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளமையால் குழந்தைகள் பாலுணவின்றி இருக்கின்றனர். இதுபற்றி பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

---

## கபாலி விநாயகர்

சங்கானை, புதன்

சங்கானை மாவடி வைரவர் ஆலயத்தில் நாளை மாலை மணி தொடக்கம் 9-30 மணிவரை கபாலி விநாயகர் பொதுமக்கள் தரிசனத்துக்காக வைக்கப்படும்.

அன்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானின் கதாப் பிரசங்கமும் இடம்பெறும்.

---

## உவநூற் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண உவநூற் சங்கத்தினது மாதாந்தக் கூட்டம் இளைப்பாறிய கல்லூரி அதிபர் திரு. ஏ. டபிள்யூ. இராஜசேகரம் தலைமையில் சுண்டிக்குளி மகளிர் பாடசாலை மண்டபத்தில் நிகழ்ந்தது. திரு. பி. சவரிமுத்து "எப்படி மன இடரைத் தடுக்கலாம்" என்னும் பொருள் பற்றி உரைநிகழ்த்தினர்.

---

## ஊர்காவற்றுறை பொது நூல்நிலையம்

ஊர்காவற்றுறை. புதன்

ஊர்காவற்றுறை பட்டின சபை காரியாலயத்துடன் இயங்கிவந்த ஊர்காவற்றுறைப் பொது நூல் நிலையம் தற்போது ஊர்காவற்றுறைப் பழைய தபாற் கந்தோர் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையத்தைப் பரிபாலனம் செய்வதற்கு என ஓர் பரிபாலனசபையும் நிறுவப்பட்டுள்ளது. பின்வருவோர் புதுக்குட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு எஸ். எம். அம்பிறஸ் (பட்டினசபைத் தலைவர்) காரியதரிசி திரு. ஆ. சபாரத்தினம்.

நிர்வாகசபை அங்கத்தவர்களாக திரு வி.ஏ, பிலிப்புப்பிள்ளை திரு ரி. அருளானந்தம், திரு ம. ஸ்ரனிஸ்லஸ். திரு இ. மாணிக்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## திருமண அழைப்பு

செல்வன் வி, க. சண்முகலிங்கம் (இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்) அவர்களுக்கும் செல்வி சித்திரா துரைசிங்கம் அவர்களுக்கும் 2-11-68 நண்பகல் 12 — 1-30 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில், திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமணத்திற்கு வருகைதந்து ஆசீர்வதிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாலை 5 மணிக்கு மணமகள் இல்லத்தில் விருந்துபசாரம் நடைபெறும்.

வி. சுப்பிரமணியம் தம்பதிகள்
15, 'ஆனந்தவாசம்,
பிறவுண்வீதி, நீராவியடி.

1034

---

## ஆட்டுச்சண்டையில் பெண்கள் இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வியா.

ஆட்டுச்சண்டையில் மாட்டிக்கொண்ட இரு பெண்கள் தாக்கப்பட்டார்களாம். இவர்கள் இருவரும் இப்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

சங்கானைப் பகுதியில் இச் சம்பவம் கடந்த இரவு நடைபெற்றதாகப் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது. ஆட்டுச் சண்டையொன்றைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள பி. தங்கேஸ்வரி, எஸ். வடிவாம்பிகை ஆகிய இருவரையும் சின்னத்துரை என்றவர் தாக்கியதாக பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

சங்கானைப் பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். [ஈ. நி]

---

## 28-வது வருடாந்த கூட்டம்

காரைநகர், புதன்

காரைநகர் மணிவாசகர் சபை 28-வது வருடாந்தக் கூட்டம் திரு. செ. இராசையா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை பகல் 4 மணிக்கு காரைநகர் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

---

## வரிவிளம்பரம்

சுமார் ஒரு லொறி கொள்ளத்தக்க பாவிக்கப்பட்ட அரைவட்ட நாட்டு ஓடுகளும், இரண்டு லொறி கொள்ளத்தக்க கட்டடப் பாவனை கற்களும் எடுத்துச் செல்வதற்கு 'இலவசமாக' கிடைக்கும். தொடர்பு கொள்ளவும். 42/6, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 306

### தேவை

பங்காளர்கள்!

ரூபா 5000 முதலுடன் இரு பங்காளர்கள் தேவை. கூடிய ஆதாயம் உண்டு. இளைப்பாறியோரும் சேரலாம். விபரங்களுக்கு எழுதுங்கள். "கனிமனை", பூனகரி. 149

### காணவில்லை

எனது மகன் அருணேஸ்வரன் (வயி) காணவில்லை. வயது 13. கட்டைக் கறுத்த காற்சட்டை, வெள்ளை சேட் அணிந்திருந்தார். கண்டால் பக்கத்து பொலிஸில் அறிவிக்கவும் அல்லது எனக்கு அறிவிக்கவும். நா. பரராஜசிங்கம், முரசுமோட்டை, பரந்தன். 305

---

## "என்னை விழுத்திவிட்டு தாலியுடன் பாய்ந்து ஓடினர்" திருட்டு வழக்கில் பெண் சாட்சியம்

சாவகச்சேரி புதன்

"சம்பவதினம் இரவு 11 மணிக்கு நித்திரையில் இருந்தபோது யாரோ எனது கழுத்தில் பிடிப்பது போலிருந்தது. நான் கண்விழித்து எனது கையால் கழுத்தைத் தடவியபோது ஒரு வாலிப தலைமயிர் எனது கைக்குள் அகப்பட்டது. உடனே நான் "கள்ளன் கள்ளன்" எனக் குளறினேன். எனது கணவர் விழித்தெழுந்து "ரோச்" லைற்றைப் பிடித்தார். அச்சமயம் எதிரி விசுவலிங்கம் என்னை இழுத்து விழுத்திவிட்டு 700 ரூபாய் பெறுமதியான எனது தாலிக் கொடியுடன் 'கேற்'றால் பாய்ந்து ஓடினர்.

தாலிக்கொடி திருட்டுவழக்கொன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் [illegible] சாட்சியமளித்த பராசக்தி அம்மா பேரம்பலம் (25 வயது) மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் கைதடி நுணாவில் வாசியான முருகேசு விசுவலிங்கம் என்பவர் (27 வயது) அதே ஊர் வாசியான திருமதி பராசக்தி அம்மா பேரம்பலத்தின் வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசித்து ரூபா 700 பெறுமதியான தாலிக்கொடியைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிரி சார்பில் புரக்டர் வி. செல்லத்தம்பி ஆஜரானர்.

விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்திரேட் எதிரியின் கைவிரல் அடையாளங்களை எடுக்கும்படி உத்தரவிட்டு எதிரியை அடுத்த மாதம் 7-ம் திகதிவரை ரிமாண்டில் இருக்கும்படியும் கூறித் தீர்ப்பு வழங்குவதை அத்திகதிக்கு ஒத்திவைத்தார்.

---


## ஆண்டு விழா

அழிபுரம், புதன்

சங்கானை மேற்கு கைப் பணிக் கழக ஆண்டு விழாவும் பொருட் காட்சியும் கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை எம். பி. திரு. [illegible] தலைமையில் நடைபெற்றது.

---

3-வது வாரம்
கிங்ஸ்லி பினாலா மைலன்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்)
★ எம். ஜி. ஆர். ★ சரோஜாதேவி
அசோகன், நம்பியார், சந்திரபாபு, தங்கவேலு
இன்னும் பலர் நடித்த
ஆர். ஆர். பிக்சர்ஸ்



# பறக்கும் பாவை

(கண்கவர் கலர்)

95-வது தினம்
லிடோ (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
**சங்கம்**
(டெக்னிக்கலர்)

---

சிங்கம் மார்க்
LIONBRAND SANDANADI THYLAM • சிங்கமார்க் •
**சந்தனாதித் தைலம்**
வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:-
போன 23006-93250
**ப.மு. & சன்ஸ்.**
88. செட்டியார் தெரு. கொழும்பு.11

---

இங்கிலாந்தில் தயாரிக்கப்பெற்ற
6 வோல்ட் - 12 வோல்ட்
**மில்லர் டைனமோக்கள்**
குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
**நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்**
141-143, ஸ்ரான்லி ரோட் — யாழ்ப்பாணம்.
போன்: 7016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கா, போர்சுக்கலுக்கு எதிராக அரசியல், பொருளாதார தடை

## ஐ. நா. வில் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பிரேரணை

நியூயோர்க், ஒக். 30

ரொடீஷியா சம்பந்தமாகத் தென்னாபிரிக்காவும் போர்ச்சுக்கலும் பின்பற்றும் கொள்கை காரணமாகத் தென்னாபிரிக்காவுக்கும் போர்ச்சுக்கலுக்கும் எதிராக அரசியல் பொருளாதாரத் தடை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரும் பிரேரணையொன்றை ஐ நா.விலுள்ள ஆசிய ஆபிரிக்க நாடுகள் குழுவும், யூகோஸ்லாவியாவும் சமர்ப்பித்திருக்கின்றன.

காலனி ஆதிக்க ஒழிப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இப்பிரேரணையை அந்தக் குழு இன்று பரிசீலனை செய்யவிருக்கிறது.

இந்தக் குழு இப்பிரேரணையைப் பரிசீலனை செய்த பின் இப்பிரேரணை ஐ. நா. பொதுச்சபையில் விடப்பட்டு அங்கீகரிக்கப்படும். இப்பிரேரணைக்கு ஆதரவு இருப்பதால் பொதுச்சபை இதை அங்கீகரிப்பது நிச்சயம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரொடீஷியா சம்பந்தமாக இதற்கு முன்னர் ஐ. நா. சபை நிறைவேற்றிய தீர்மானங்களையும் அமுல் நடத்தவேண்டுமென ஐ. நா. தலைமைக் காரியதரிசியையும், ஆசிய ஆபிரிக்க நாடுகளும் யூகோஸ்லாவியாவும் கேட்டுள்ளன.

## 'செக்'கில் ஆர்ப்பாட்டம்

பிராக், ஒக். 30

செக்கோஸ்லவாக்கியத் தலைவர்களை ஆதரித்தும் செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து சோவியத் துருப்புக்கள் வெளியேற வேண்டுமென்றும் கோரி நேற்றும் பிராக்கிலும் ஸ்லோவாக்கிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டக்காரர்களில் பெரும்பாலும் இளைஞர்களே இடம்பெற்றனர். பிராக்கில் சுமார் 85 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணையின் பின் விடப்பட்டனர் என்று ஒரு தகவல் கூறுகிறது.

## 'நல்லபிரஜைகளை உருவாக்க சாரணர் இயக்கம் வழிவகுக்கும்'

### காமன் வெல்த் சாரணர் தலைவர்

நல்லூர், புதன்

"உலகில் சுமார் 2 கோடி சாரணர் இருக்கின்றனர். நான் காமன்வெல்த்திலுள்ள 40 லட்சம் சாரணர்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்றேன். இதனால் நான் ஒரே இடத்தில் எனது கவனத்தைச் செலுத்தமுடியாத நிலையில் இருக்கின்றேன். இதன் காரணமாக அதிக நேரத்தை உங்களுடன் செலவிடமுடியாதிருக்கின்றேன். சாரணர்களுக்கு அவ்வப்பகுதியிலுள்ளவர்கள் போதிய ஊக்களித்து ஆதரவு அளித்தால் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளை உருவாக்க வழிவகுக்கும்."

இவ்வாறு காமன்வெல்த் சாரணர் தலைவரான சேர். சேர்ச்சாரில் மைக்கிளின் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெற்ற சாரணர் விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

இதில் பங்குபெற்றவர்களுக்கு சேர் மைக்கிளின் பரிசில்களை வழங்கினார். இவ்விழாவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை முதலாம் இடத்தையும், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

## "போர் நிறுத்தத்தை மீறினால் திருப்பி அடிப்போம்"

### ஜெனரல் டயான் மிரட்டல்

தெல்அவிவ், ஒக். 30

போர் நிறுத்த விதிகளை எகிப்து தொடர்ந்து மீறி வந்தால் இஸ்ரேல் திருப்பி அடிக்குமென்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் டயான் தெரிவித்திருக்கிறார்.

சூயஸ் கால்வாயின் மேற்குக் கரைப் பகுதியில் எகிப்திய துருப்புக்கள் போர் நிறுத்த எல்லையை மீறித் தாக்குதல் நடத்துவதாகவும் இஸ்ரேலியர் தெரிவித்தனர்.

இதேசமயம் இஸ்ரேலியத் துருப்புக்கள்தான் போர் நிறுத்த விதிகளை மீறுவதாக ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜோர்டான் எல்லையிலும் ஜோர்டான் துருப்புகளுக்கும், இஸ்ரேலியத் துருப்புக்களுக்குமிடையில் நேற்றும் கைகலப்பு ஏற்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. இரு தரப்பினரும் இக்கைகலப்புப் பற்றிப் பரஸ்பரம் ஒருவர்மீதொருவர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## வியட்னும் ஆலோசனை

வாஷிங்டன், ஒக். 30

தென் வியட்நாமிலுள்ள அமெரிக்கத் தளபதி ஆபிரஹாம் நேற்று வாஷிங்டனுக்கு வந்து அதிபர் ஜோன்ஸனுடன் ஆலோசனை நடத்தினார். வியட்நாமிலுள்ள நிலைமை பற்றிய பொதுவான ஆலோசனைதானென்று வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. ஜெனரல் உடனடியாகச் சைகோனுக்குத் திரும்பினார்.

## ரூ. 25 லட்சம் தேவையாம்

கொழும்பு, புதன்

அரசாங்க ஊழியர்கள் கோரியுள்ள விசேஷ படியை (ரூபா 40) வழங்குவதாக இருந்தால் சுமார் 25 லட்சம் தேவைப்படுமென திறைசேரி அறிவித்துள்ளது.

இதற்கிடையே வருகிற 28-ம் திகதி பொதுவேலைநிறுத்தத்தை மேற்கொள்வது சம்பந்தமாக அரசாங்க ஊழியர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

## 'விவசாயம் செய்ய காணி எடுத்துத்தருக'

### தமிழரசுக்கட்சியிடம் கோரிக்கை

அளவெட்டி, புதன்

தமிழ்பேசும் வாலிபர்களைத்தியில் தற்போது நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், எமது நாட்டின் உணவுதேவையைப் பூர்த்தி செய்யவும் கூட்டுறவு முறையில் விவசாயம்செய்வதற்கு நீர்வசதியுள்ளதாக குறிப்பாக கிளிநொச்சிப்பகுதியில் காடு எடுத்துத்தரும்படி இலங்கை தமிழரசுக்கட்சியிடம் தமிழரசுக்கட்சியின் தெல்லிப்பளை வாலிபமுன்னணி கேட்டுக்கொண்டுள்ளது.

தெல்லிப்பளையில் தலைவர் திரு. செ. சித்திரானந்தம் தலைமையில் தமிழரசுக்கட்சி தெல்லிப்பளை வாலிப முன்னணியின் கூட்டமொன்று நடைபெற்றது.

## கூட்டுறவுக் கொள்கைக்கு முரணானது"

வட்டுக்கோட்டை, புதன்

"விவசாயக்கடனை அரசாங்க வங்கி மூலம் வழங்கும்போது விவசாயி தனது வீட்டுக்குரிய பங்கீட்டரிசிப் புத்தகங்களை அடகுவைக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் முடிவு சட்டவிரோதமானது. கூட்டுறவுக்கொள்கைக்கு முரணானது" என்ற ஒரு தீர்மானத்தை வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை தனது அண்மையில் நடைபெற்ற வருடாந்தக்கூட்டத்தில் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ளது.

## புனித நோன்புக்கு நாட்டரிசி

யாழ்ப்பாணம், வியாழன்

அடுத்த மாதம் 22-ம் திகதியிலிருந்து டிசம்பர் 22-ம் திகதி வரை வடபகுதி முஸ்லிம்களின் குடும்பங்களுக்கு நாட்டரிசி வழங்கும்படி யாழ். கூட்டுறவு பண்டகசாலைக்கு அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி ஒரு மாதமும் முஸ்லிம்களின் புனித நோன்பு கொண்டாடப்படுவதால் நாட்டரிசி வழங்கும்படி ஜனாப் மு. இ. ஷாஹுல் அரசாங்க அதிபரைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

## இவர்கள் சொற்படி நடப்போம்

உரும்பராய், புதன்

"வள்ளுவர், ஔவையார் முதலியவர்களின் சொற்படி நாம் நடந்தால், எமது பலர் நோயினின்றும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். பண்டைய பழக்க வழக்கங்களையும், பழைய உணவு வகைகளையும் அறவே கைவிட்டதால் இன்றைய மக்கள் இனந்தெரியாத நோய்களினால் பீடிக்கப்படுகிறார்கள்"

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி விஞ்ஞானக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ். அரசினர் வைத்தியசாலையின் தோற்புரை வைத்தியர் திரு. ப. சிவசோதி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ஒவ்வொரு மக்களும் தம்மைத் தாமே சுத்தமாக வைத்துக்கொண்டால் அவர்கள் நோய்களினின்றும் தப்பித் சுபீட்சமாக வாழமுடியும் என்றார்.


## சேவைக்கு பாராட்டு

உரும்பராய், புதன்

உரும்பராய் சித்திர அரங்கு மன்ற முன்னாள் போஷகரும் உரும்பராய் இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரியருமான திரு. வ. மகாலிங்கத்தின் சேவையைப் பாராட்டி மன்ற அங்கத்தவர்கள் பிரிவுபசார விழா நடாத்தினர். மன்றத் தலைவர் செல்வன் துரைமனோகரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கல்லூரி அதிபர், மன்ற முன்னாள் அங்கத்தவர்களான செல்வன் எஸ். பாலசுப்பிரமணியம், செ. சற்குணநாதன் ஆகியோரும் மாணவர்கள் சார்பில் செல்வி மா. சற்குணவதி, செல்வன் தி. சிவலோகநாதன், செ. குகதாஸ் ஆகியோரும் உரைநிகழ்த்தினர், திரு வ. மகாலிங்கம் நன்றி கூறினார்.

நெற்பயிரோடு போட்டியிட்டு
வளரும் அகன்ற இலை, களைகள், கோரை வகை ஆகிய களைகளை அழிக்க


சந்தனக்கோரை


சிறுகோரை

ஹெடோனல் "எம்" 40% எம். சி. பி. ஏ. கொண்டது
ஹெடோனல் "டி" 55% 2. 4 டி கொண்டது
விதைத்து 3 கிழமைகளுக்குப் பின்னரும், 6 கிழமைகளுக்கு முன்னரும் பாவிக்கவும்.
விபரங்களுக்கு எழுதுக!
ஹேலீஸ் லிமிட்டெட்
400, டீன்ஸ் ரோட், கொழும்பு 10.
தொலைபேசி: 96[illegible]
HAYLEYS BAYER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மேலதிக நேரவேலை சம்பளம் வழங்குக'

## தமிழாசிரிய சங்கம் கோருகிறது

தெல்லிப்பழை, புதன்

"தற்போது பரீட்சார்த்த நிலையில் இருக்கும் ஆறு நாள் வேலைப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு மேலதிக நேர வேலைச்சம்பளம் வழங்குக" என அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமொன்று அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்க விசேஷ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

யாழ். நாவலர் பாடசாலையில் நடைபெற்ற இவ்விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் பின்வருமாறு:

○ சில கல்விப் பிரதேச வித்தியாதிகாரிகளால் சில தலைமையாசிரியர்கட்கு இங்ஙனம் தகுதியின்மை காரணமாக சேவை நீடிப்பு மறுக்கப்பட்டுள்ளதால் பிரதேச வித்தியாதிபதிகளின் சுற்று நிருபங்களுடன் பிரதம மந்திரியைப் பேட்டிகண்டு இச்சிக்கலை வெளிப்படுத்த ஒரு முற்றுப்புள்ளி வைத்தல்.

○ 1-1-69ல் நடைபெற இருக்கும் மாற்றத்திட்டத்தில் ஆசிரியர் பயிற்சிக் காலம் ஆசிரியர் மாற்றத்துக்குரிய சேவைக் காலத்துடன் சேர்க்கப்படாமை நீதியற்றது என்றும், கடந்த ஆண்டுகளில் நடைமுறையில் இருந்தது போல ஆசிரியர் பயிற்சிக் காலத்தையும் எந்தக் கல்விப் பிரதேசத்தில் இருந்து பயிற்சிக்குச் சென்றார்களோ அந்தக் கல்விப் பிரதேச சேவையாகக் கணிக்கப்பட நடவடிக்கை எடுத்தல்.

○ வெளியிடங்களில் நான்கு வருடம் சேவை செய்தவர்களை சொந்த இடங்களுக்கு மாற்றச் சகல நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில் வெளியிடங்களில் ஒருபோதும் சேவையாற்றாதவர்கள் இருக்கும்வரை ஏற்கெனவே வெளியிடங்களில் நான்கு வருடத்துக்குக் குறையாமல் கடமையாற்றியவர்கள் திரும்பவும் வெளியிடங்களுக்கு மாற்றுவது அநீதி என்றும் அதை இச்சங்கம் முற்றாக எதிர்க்க வேண்டுமென்றும் கோருதல்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**வியாழன் 31—10—68**

(செய்திகள்: காலை 7-00, பகல், 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அல் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 திருப்பாடல்கள் 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீ அல் 49 மீ**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ அல் 61 மீ**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்: இரவு 6-15 பாங்கு. 6-45 பேச்சு, 7-00 இராகசஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நானவாத்தியக்கச்சேரி, 10-00 நேயர்விருப்பம்.

## தந்திக் கம்பி திருட்டு

வண்டத்தரிப்பு, புதன்

செம்பவினான் ஊதபாரத்தோர் தந்திக்கம்பி திருடப்பட்டுள்ளது. இரு பக்கக் கம்பிகளும் திருடப்பட்டுள்ளன. இரண்டாவது முறையாக இங்கு தந்திக் கம்பி களவு நடைபெற்றுள்ளது.

கடந்த வாரத்தில் இவ்வாலை உமதுபாரத்தோரின் தந்திக்கம்பிகளும் திருடப்பட்டன.

## இன்றைய பலன்

31-10-68

ஐப்பசி 15 உ

வியாழக்கிழமை

திதி - தசமி பகல் 7-56 மேல் ஏகாதசி.

நட்சத்திரம் - சதயம் மாலை 6-31 மேல் பூரட்டாதி.

ராகுகாலம் - 1-33—3-03.

சுபநேரம் - 7-33 — 9-03.

இன்று பிறந்தவர்களுக்கு:— நினைவின் நிழலாட்டம் உங்களுக்கு வேதனையைத் தரலாம். மனைவியின் உடல் நலம் பாதிக்கப்படுவதினால் வைத்தியச் செலவுகளுக்கு இடமுண்டு. உணவு விடயத்தில் அதிக கவனம் வேண்டும். சிலர் வாழ்க்கையில் மணத்துக்கு இடமுண்டு. தொழிலாளர்களாயின் சோர்வு மிகுதியாக இருக்கும். விவசாயிகளுக்கும் மந்தநிலையே காணப்படுகின்றது. வீணாதங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். தெய்வநம்பிக்கை சிறந்த மருந்தாகும்.

மேஷம் - உள் வீட்டில் பூசல். உபத்திரவ மிகுதி.

ரிஷபம் - வாகன விருத்தி, வாழ்விலும் திருப்தி.

மிதுனம் - என்ன நடப்பினும் நினைத்தது முடியும்.

கடகம் - வேவுக்காரர் தொடுப்பர், விழிப்புடன் இரு.

சிம்மம் - இல்லறம் இனிக்கும், இணைப்பும் இறுகும்.

கன்னி - தவறுன பாதை, தலை குனிய நேரிடும்.

துலாம் - பொதுத்துறை நாட்டம், பரந்த எண்ணம்.

விருச்சிகம் - வியாபார விருத்தி, வசதிகள் பெருகும்.

தனுசு - கலகலக்கும் பணம் சலசலக்கும்வாழ்வு

மகரம் - பொருள் தவறும், நிதானம் வேண்டும்.


கும்பம் - துன்பத்தின் நிழலாட்டம், தொடர்ந்து வரும் பகை.

மீனம் - பேச்சுவன்மை, பெரிய இடத்து உறவு

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை


# ட்ராக்டர் ஒன்றை வாங்கும்போது வெகு விழிப்பாயிருங்கள்!



✓ அந்த ட்ராக்டர் இலங்கையில் பரீட்சிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

✓ நாடு முழுதும் விற்பனைக்குப் பிற்பட்ட பராமரிப்புச் சேவை கிடைக்குமா?

✓ அசல் மாற்றுறுப்புக்கள் உடனே கிடைக்குமா?

✓ பல பணிபுரியும் ட்ராக்டரா?

✓ எந்த வேலையையும் மேற்கொள்ளத் தக்க பலதரப்பட்ட துணை உறுப்புக்கள் கொண்டதா?

✓ அதனை விற்பனை செய்யும் கம்பனி எவ்வளவு நம்பிக்கையானது?

## மஸி - பெர்குசன்

MF

மட்டுமே பரிபூரண பதில் தரவல்லது.

BROWNS GROUP BG ESTABLISHED 1875

நீங்கள் விழிப்பாயிருக்க விரும்பினால் இதனை வெட்டி எடுத்து —

பிரவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்
கமத்தொழிற் பிரிவு, த.பெ. 290, கொழும்பு.
என்னும் முகவரிக்கு அனுப்புக.

மஸி பேர்குசன் ட்ராக்டர்கள் பற்றிய விவரங்களும் துண்டுப் பிரசுரங்களும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் பெயர்:........................................

முகவரி:........................................

........................................

நீங்கள் நாட்டம் கொண்டுள்ள உபகரணம் எது?

........................................

**பிரவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்**

விவசாயப் பிரிவு

தேவநம்பியதிஸ்ஸ றோட்,

கொழும்பு 10.

தொலைபேசி: 93097

GC/396


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழக உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தினரால் சகல விளையாட்டு கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் "நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியில்" "மயிலிட்டி யூனியன்ஸ்" விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் "வைக்கிங்ஸ்" விளையாட்டுக்கழகத்தை 5—1 கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. குமாரயா மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

## சென்.அன்ரனிஸ் வெற்றி

குருநகர் விளையாட்டுக் கழகத்தினருக்கும், பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையில் நடைபெற்ற சாரசாரமான உதைபந்தாட்டப் போட்டியில்சென். அன்ரனிஸ்வெற்றிபெற்றது. இடைவேளையின் போது சென். அன்ரனிஸ் 1-0 கோலைப் பெற்றிருந்தது. இடைவேளையின் பின் இக்கோஷ்டி மேலும் இரு கோல்களைப்போட்டது. இக்கோல்களை முறையே, தேவதாசன்-2, பேர்னாண்டோ-1 போட்டனர். குருநகர் கோஷ்டியின் சார்பில் சனியூட், 'பெனல்டி' மூலம் ஒரு கோலைப் போட்டார். ஆட்ட முடிவில் சென். அன்ரனிஸ் 3—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## வெற்றி தோல்வியில்லை

அரியாலை விளையாட்டுக் கழகத்திற்கும், சாரநகர் கடற்படை கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு சாராரும் தலா 2—2 கோல்களைப் போட்டமையால் ஆட்டம் சமமாக முடிவுபெற்றது. இப் போட்டிக்கு திரு. சிவராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் குருநகர் 'வைக்கிங்ஸ்' விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் இரு கோஷ்டியினரும் தலா 1—1 கோலைப் போட்டமையால் போட்டி சமமாக முடிவுற்றது. இப் போட்டிக்கு திரு. நாகமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

சமமாக முடிவுற்ற இவ் இருபோட்டிகளும், மீண்டும் நடைபெறவிருக்கின்றன.

---

இன்னும் சில நாட்களே உள

'ஈழநாடு'

10-வது ஆண்டு நிறைவு போட்டி

'ஈழநாடு' ஸ்தாபனம் நடாத்தும்

## சிறுகதைப் போட்டி

முடிவு தினம் அண்மிவிட்டது.

தெரிவுசெய்யப்படும் இரு சிறந்த சிறுகதைகளுக்கு

ரூபா 300

பரிசாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

1-வது பரிசு

ரூபா 200

2-வது பரிசு

ரூபா 100

'ஈழநாடு' இதழில் வெளியாகும் இதற்கான கூப்பன், போட்டிக்கு வரும் சிறுகதையுடன் இணைக்கப்படவேண்டும்

போட்டி முடிவு திகதி

15-11-68

---

# 'கல்' எறிந்ததும் கடுகதிபஸ் நின்றதாம்

## ஆவலோடு ஏறியவர்கள் பொலிஸ் போய்ச் சேர்ந்தனர்

திருகோணமலை, புதன்

பஸ் நிற்பாட்டப்படாத தால் கோபம் கொண்ட இளைஞர் இருவர் பஸ்ஸை நோக்கிக் கல் எறிந்தார்களாம். கல்லைக் கண்டதும் பஸ் டக் என நின்றதாம். தம்முயற்சி பலித்ததை எண்ணி மகிழ்ந்தபடி ஓடிப்போய் ஏறிக்கொண்ட அந்த மூன்று வாலிபர்களையும் பத்திரமாக ஏற்றிச் சென்று பொலிஸில் ஒப்படைத்தாராம் பஸ் கண்டக்டர்.

தொண்டமானாறிலிருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த பஸ் வண்டியை கன்னியாய் என்னுமிடத்தில் மூன்று இளைஞர்கள் கையைக் காட்டி மறித்தார்களாம். கடுகதி பஸ்வண்டி நிற்காததால் ஆத்திரம் கொண்ட இளைஞர்கள் ஒன்றை பஸ்வண்டியை நோக்கி எறிந்தார்களாம். கல்வண்டியில் மிதிபலகையில் நின்ற கண்டக்டரின் முகத்தை உரசியபடி வாறு [illegible] கல் பறந்ததாம். உடனே பஸ்வண்டி நிறுத்தப்பட்டதால் இளைஞர் மூவரும் ஆவலோடு தமக்காகக் காத்துநிற்கும் பஸ் வண்டியை நோக்கி பறந்தார்களாம். அம்மூவரையும் ஏற்றிக்கொண்டு பஸ் வண்டி திருமலையின் உப்புவெளி பொலிஸ்நிலையத்தை நோக்கி விரைந்ததாம் மூவரும் பவுத்திரமாக பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட பின் பஸ்வண்டி ஏனைய பிரயாணிகளுடன் பவிதிலைக்குச் சென்றடைந்தது. இளைஞர்கள் மூவரும் ஒருமணித்தியால நேரம் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விடுதலையாக்கப்பட்டனர். பிரயாணிகளாகும் சாட்சிகூற முன்வராததே இதற்கு காரணமாம்.

---

முஸ்லிம் வித்தியாலய

## பெற்ருேர் ஆசிரியர்சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி முஸ்லிம் வித்தியாலய பெற்ருேர் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் தலைமையாசிரியர் ஜனாப் எம் எச். எம். அப்துல் றஷீது தலைமையில் ஆரம்பமாகியது.

ஆசிரியர் எம். அப்துல் கனி கிராஅத் ஓதினார். காலஞ்சென்ற வித்தியாலய ஸ்தாபகர், முகாமையாளர்கள் ஆதரவாளர்கள் ஆகியோர்களின் ஆத்ம சாந்திக்காக கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது.

ஆசிரியர் எம்.எம் யூசுபு பெற்ருேரின் கடமைகள் என்னும் பொருள் பற்றிப் பேசினார்.

இந்தப் பாடசாலைக்கு மஹ்மூத் உல் உலூம் வித்தியாலயம் என்று பெயரிட வேண்டுமென வித்தியாபகுதியைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென ஏகமனதாக தீர்மானம் நிறைவேறியது.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் எம் எம் சுல்தான். தலைவர் தலைமையாசிரியர் ஜனாப் எம் எச் எம் அப்துல்ரஸாக். காரியதரிசிகள் ஆசிரியர் ஜனாப் எம். அப்துல் அசீஸ் ஜனாப் எஸ் எம். இஸ்மாயில், தனாதிகாரி ஜனாப் ஏச். எம் அப்பாஸ் ஹாஜியார்.

நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

அராலி கூட்டுறவு சங்க

## ஊழியருக்கு போனஸ்

அராலி, புதன்

அராலி வடமேற்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் மூன்ருமாண்டு வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. ந. துரைரத்தினத்தின் தலைமையில் நடைபெற்றது. 15 பேரடங்கிய நிர்வாக சபையை 9 பேராகக் குறைக்க உபவிதி மாற்றஞ் செய்யும் ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றியது. புதிய நிர்வாகிகள் வருமாறு: தலைவர் திரு. ந. துரைரத்தினம், உப-தலைவர் திரு. வி. நாகலிங்கம். காரியதரிசி திரு.வே. வி. மூர்த்தி. நிர்வாகசபை பொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

ஊழியருக்கு ஒருமாத அடிப்படைச் சம்பளத்தை போனஸாக வழங்கவேண்டுமென்ற இன்னோர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

---

## 20-ம் ஆண்டு விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், வியா.

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூகநிலைய முத்தமிழ்மன்றப் படிப்பக 20-ம்வருடாந்தவிளையாட்டு விழாவும் முத்தமிழ்க் கலைவிழாவும் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை விளையாட்டு மைதானத்திலும் வித்தியாசாலை மண்டபத்திலும் நடைபெற்றன. [illegible] [ந. நி]

---

## புதிய சமாதான நீதவான்

[illegible] சங்கானை, புதன்

பாதகலைச் சேர்ந்த திரு எஸ், பீற்றர் யாழ் மாவட்டத்திற்கு புதிய சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் 29-ம் திகதி யாழ் மாவட்ட நீதிபதி திரு இஸ்மாயில் மகாநாத் இஸ்மாயில் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர் நாற்பது ஆண்டு சேவைக்காலத்தில் மாதகல் அனுராதபுரம், சந்தாலை ஆகிய இடங்களில் கத்தோலிக்க ஆங்கில பாடசாலைகளில் தலைமையாசிரியராகவும் 17 வருடங்கள் இளவாலை 'சென்ஹென்றி' ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் இறுதியாகப் பண்டத்தரிப்பு மகளிர் உயர்நிலைப் பள்ளியிலும் கடமையாற்றியுள்ளார்.

---

## இன்று

சித்தங்கேணி, வியா.

வட்டுக்கோட்டை பிலவத்தை கற்பகப்பிள்ளையார் கோவிலில் சங்காபிஷேகம் இன்று நடைபெறவிருக்கின்றது. கணேசானந்தா பஜனைச் சபையினரின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறும்.

---

## 24-வது ஆண்டுக் கூட்டம்

வட்டுக்கோட்டை, புதன்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் தனது 24-ம் ஆண்டுக்கூட்டத்தை வரும் 4-ம் திகதி நடாத்தவுள்ளது. இச் சமாசம் 148 சங்கங்களை அங்கத்துவமாகக் கொண்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

